# 07-05-2024 செய்தி

## ஜிஎஸ்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்

- ஜிஎஸ்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் முதல் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி சஞ்சய் குமார் மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவருக்கு மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இதன்மூலம் ஜிஎஸ்டி சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் நிறுவப்பட்ட ஜிஎஸ்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (ஜிஎஸ்டிஏடி) முழுவீச்சில் செயல்படத் தொடங்கியது.
- உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான தேடுதல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்ப்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017-இன் கீழ் ஜிஎஸ்டிஏடி நிறுவப்பட்டது.
- இந்த தீர்ப்பாயம் மத்திய மற்றும் மாநில ஜிஎஸ்டி சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்காக தொடங்கப்பட்டது.
- ஜிஎஸ்டி கவுன்சிலின் ஒப்புதலுக்குப் பிறகு இந்த தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வை தில்லியிலும் கிளை அமர்வுகளை நாடு முழுவதும் மொத்தம் 31 இடங்களில் அமைக்கப்படவுள்ளது.
- ஜிஎஸ்டி சார்ந்த பிரச்சனைகளை தீர்ப்பதுடன் உயர்நீதிமன்றங்களில் ஜிஎஸ்டி தொடர்பான வழக்குகளின் சுமையையும் குறைக்க இந்த தீர்ப்பாயம் உதவுகிறது.

## 'போயிங் ஸ்டார்லைனர்'-ல் செல்லும் முதல் பெண்

- இரண்டு முறை விண்வெளி பயணம் செய்த இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மூன்றாவது முறையாக விண்ணை நோக்கி தனது புதிய பயணத்தை தொடங்குகிறார்.
- 'போயிங் ஸ்டார்லைனர்' எனும் புத்தம் புதிய அதிஉயரக விண்கலத்தில் செல்லும் முதல் பெண் என்ற சாதனையை இதன் மூலம் சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார்.
- குஜராத்தை சேர்ந்த தீபக், ஸ்லோவேனியாவை சேர்ந்த போனி பாண்ட்யா தம்பதிக்கு மகளாக அமெரிக்காவின் ஓகியோ மாகாணத்தில் பிறந்தவர் சுனிதா வில்லியம்ஸ்.
- அமெரிக்க கப்பல் படை விமானியான இவர் 2006-ம் ஆண்டில் நாசா மூலம் முதல்முறை தனது விண்வெளிப்பயணத்தை மேற்கொண்டார்.
- அதனை அடுத்து 2012-ம் ஆண்டில் இரண்டாம் முறையாக விண்ணைத் தொட்டார்.
- இதுவரை 322 நாட்களை அவர் விண்ணில் கழித்திருக்கிறார். அதுமட்டுமின்றி விண்ணில் நெடுநேரம் நடைபயின்ற முதல் பெண் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர். ஏழு முறை விண்வெளியில் நடைபயின்ற சுனிதா மொத்தம் 50 மணி நேரம் 40 நிமிடங்கள் விண்வெளியில் நடந்திருக்கிறார்.